# முதல்வரின் வடிவத்தில் வாழ்கிறார் கலைஞர்!

**கலைஞர் கோட்டம் திறப்பு விழா வில் கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் தஞ்சை இனியன் வாசித்த கவிதை:**

கலைஞர் நூற்றாண்டு
கவியரங்கத்துக்குத்
தலைமையேற்றிருக்கும்
எங்கள் கவிப்பேரரசே!

வைகைநதிக் கரையோர
வார்த்தை நிலமே!
திருக்குவளைக்குள் நிரம்பிய
பெரியகுளமே!

முத்தமிழ் அறிஞர் கலைஞரிடமிருந்து
பேனாவைப் பெற்றவர் நீங்கள்!
பிரம்மனையே நினைத்து தவம்
செய்தால்
பிரம்மாஸ்திரம் கிடைக்குமாம்!
கலைஞரையே நினைத்து
தவம்செய்த உங்களுக்குப்
பேனாஅஸ்திரம் கிடைத்திருக்கிறது!

பெண்ணுரிமை பேசிய
கலைஞரிடமிருந்து
"PEN" உரிமை பெற்றவர் நீங்கள்!

நாங்களெல்லாம்
கலைஞரின் பேனாவைப் பற்றி
எழுதுகிறோம்!
நீங்கள் மட்டும்தான்
கலைஞரின் பேனாவைப்
"பற்றி" எழுதுகிறீர்கள்!

கலைஞர்தான் உங்கள் தமிழாசான்!
மாணவனின் கட்டைவிரலைக் கேட்கிற
ஆசான்கள் உண்டு! - ஆனால்
தன் மாணவனுக்காக
எழுதுகோல் என்னும்
ஆறாவது விரலையே அளித்தவர்
நம் கலைஞர்!

வெறும் பேனாவா அது?
எழுதுவதற்கு முன்
மை இருக்கிறதா என்று
உதறிப் பார்க்கும் போதே
பலரையும்
கதறிப் பார்க்கவைத்த பேனா அது!

தரையடியில் கிடந்தவர்களைத்
தலைதூக்க வைத்த
அரையடி ஆயுதம் அது!

AK47 பின்னால் வந்தது!
கலைஞர் தன் கையில் வைத்திருந்த
MK47 அது

எங்கள் கலைஞர்
இறந்தும் வாழ்கிறார்
முதல்வரின் வடிவத்தில்.....!
இறந்தும் எழுதுகிறார்
உங்கள் கரத்தினில்......!

★★★

தேர்நிறுத்தி புகழ்பெற்றவன்
பாரிமன்னன்! - அணைகட்டி
நீர்நிறுத்தி புகழ்பெற்றவன் கரிகாலன்!
போர்நிறுத்தி புகழ்பெற்றவள் அவ்வை!
கல்லில் உளியின்
கூர்நிறுத்தி புகழ்பெற்றவன் மாமல்லன்!

ஒவ்வொரு நாளும்
உழைப்பில் வேர்நிறுத்தி -
பெரும்தொற்றால்
நிலைகுலைந்த தமிழகத்தை
நேர்நிறுத்தி
வறண்டு விடாமல்
வயல்களில் ஏர்நிறுத்தி
வருங்கால தலைமுறைக்குச்
சீர்நிறுத்தி
யார் நிறுத்திவிட நினைத்தாலும்
முடியாமல்
வரலாற்றில் தன்
பேர்நிறுத்தி புகழ்பெற்றவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

சோதனை என்ற சொல்லின்
இரண்டு கொம்பை உடைத்து - அதை
சாதனை என்ற சொல்லாக
மாற்றுகிற சமரன்!

நாற்காலிக்கடியில் தேடல்
கூவத்தூரில் ஆடல்
சாதி வெறிபிடித்து கூடல்
மதத்தை வைத்து
மக்களைக் கூறு போடல்
இந்தச் சக்திகளை அடியோடு சாய்க்க
திராவிட மாடல் தந்த தலைவர் அவர்!

கட்டணமில்லாப்
பேருந்துப் பயணம் வழங்கி
உழைக்கும் பெண்கள் - பேருந்தில்
ஏறும் படிகளை
ஏணிப்படிகள் ஆக்கிய முதல்வர்!

காலடியில்
அகழாய்வு நடத்திய ஆட்சி அல்ல!
கீழடியில்அகழாய்வுநடத்தி-தமிழனின்
கீர்த்தியைப் பறைசாற்றிய ஆட்சி இது!

எதிர்ப்புகளைப் - புன்னகை
உதிர்ப்புகளால் வெல்கிறவர் நீங்கள்!

மருத்துவமனைகளைத் திறக்கிறாய்
நூலகங்களைத் திறக்கிறாய்
பள்ளிக்கூடங்களைத் திறக்கிறாய்
தொழிற்சாலைகளைத் திறக்கிறாய்
மேட்டூரிலும் திறக்கிறாய் - இன்று
காட்டூரிலும் திறக்கிறாய்
எல்லாவற்றையும் திறந்து திறந்து
எதிரிகளின் வாயை மட்டும் மூடுகிறாய்!

செயல்களால் பேசுகிறவர் நீங்கள்!
உங்களுக்கு
அரிசிக்கொம்பனையும்அடக்கத்தெரியும்
அரசியல் கொம்பன்களையும்
அடக்கத் தெரியும்!

ஆனால்-
பகை சேர்ப்பதைவிட
ஏழைகளின் முகங்களில்
புன்னகை சேர்ப்பதையே
விரும்புகிறீர்கள்!

கொள்கையில் சூரியன்
பொறுமையில் காந்தி எனச்
சுற்றிவரும் சூரியகாந்தி நீங்கள்!

கலைஞர் கண்ட கனவே!
திராவிடத் தினவே!
எங்களைக் காக்கும் இமையே!
விழித்துக் கொண்டே
இருக்கும் விதையே!
உங்களுக்கு என் வணக்கம்!

கலைஞர் கோட்டம்
காணவந்த
கலைஞர் கூட்டமே!...... வணக்கம்!

★★★

கலைஞரின் நூற்றாண்டு என்பது
ஒரு காலக் கணக்கு அல்ல!
ஒரு நாத்திகன் நிகழ்த்திய
திருவிளையாடல்கள்!

தசாவதாரங்களைத்
தனிமனிதனாலும் எடுக்கமுடியும்
என்று நிரூபித்த நிசக்கதை அது!
பத்திரிக்கையாளர் - கதாசிரியர் -
வசனகர்த்தா - பாடலாசிரியர் -
பேச்சாளர் - உரையாசிரியர் -
அரசியலாளர் - ஆட்சியாளர் -
சமூக சிந்தனையாளர் -
இனத்தின் தலைவர்

இவையெல்லாம்
பத்தாவது படித்தவர்
எடுத்த பத்தாவதாரங்கள்!

100 என்பது ஓர் எண் அல்ல!
பூஜ்யம் பூஜ்யமாக வாழ்ந்தவர்கள்
"ஒன்று" என
தலைநிமிர்ந்து நின்றதன் குறியீடு அது!



**கவிஞர் தஞ்சை இனியன்**

மண்ணாங்கட்டிகளாய்
வாழ்ந்தவர்களை
மாளிகை கட்டி வாழவைத்த
நூற்றாண்டு இது!

நீசமொழி என்றும்
நாசமொழி என்றும் அழைக்கப்பட்ட
எம்மொழியை
செம்மொழியாக்கி - இன்று
ஆலயங்களின்
பூசைமொழி ஆக்கிய நூற்றாண்டு இது!

படிதாண்டக் கூடாது
என்றார்கள் பெண்களை!
"பெண்ணே!
படி! தாண்டு!" என்று
மாணவியர்களுக்கு
மாதம் ஆயிரம் ரூபாய்
அளித்த நூற்றாண்டு இது!

தெருப்பக்கம் வரக்கூடாது
என்றார்கள்!
அந்தத் தெருக்களுக்கே
அம்பேத்கர் தெரு, பெரியார் தெரு
என்று பெயர்வைத்து
அவர்களை நடக்கவைத்த
நூற்றாண்டு இது!

சாலையோரமாய்
சாக்கடையோரமாய்
வயல்வெளியோரமாய்
வாய்க்கால் கரையோரமாய்
இப்படி
ஓரம் ஓரமாய்
வேலை பார்த்தவர்களின் பிள்ளைகள்
இன்று
OMR ல் வேலை பார்க்கிறார்களே.....

ஏழைச்சேரியில் பிறந்த பிள்ளைகள்
- இன்று
வேளச்சேரியில் வெற்றிக்கொடி
கட்டுகிறார்களே.....
லட்சியமே செய்யப்படாதவர்களின்
பிள்ளைகள் - இன்று
லட்சம்லட்சமாக சம்பாதிக்கிறார்களே....
இந்த மாற்றத்தை நிகழ்த்தியது
இந்த நூற்றாண்டு!

மேலே இருக்கிற பொருட்கள்
கீழே விழும் என்பது
நியூட்டனின் விதி!
கீழே கிடந்த மனிதர்களை
மேலே கொண்டுவந்ததுதான்
கலைஞரின் மதி!

★★★

கலைஞர் ஒரு சுயமரியாதைச் சுயம்பு!
தன்னை
அப்புறப் படுத்த நினைத்தவர்களை
யெல்லாம்
குப்புறக் கவிழ்த்தவர் அவர்!

கேள்விகளால் துளைத்தார்கள்
மடக்க முடியவில்லை!
வேள்விகளை வளர்த்தார்கள்
அடக்க முடியவில்லை!
தோல்விகளைக் கொடுத்தார்கள்
முடக்க முடியவில்லை!

கடைசியாய்த்தான்
கண்டுபிடித்தார்கள்
அவருடைய தலையை மட்டுமல்ல
காலையும் வார முடியாது என்று!

★★★

சமூக நீதி என்பது
சம நீதி அல்ல!
சமம் என்கிற குறியீட்டில் கூட
மேல் கோடு
கீழ்க்கோடு உண்டு!

நடக்கத் தெரிந்த பிள்ளையை
வந்து சாப்பிடச் சொல்லும் தாய்
தவழ்கின்ற குழந்தைக்கு
தானே சென்று ஊட்டுவதுதான்
சமூக நீதி!
கலைஞர்-
தவழ்கின்ற குழந்தைகளுக்குத்
தாயானார்!
படுக்க முடியாதவர்களுக்கு பாயானார்!

★★★

வாழும் கலைஞரை
எப்படி வாழ்த்துவது?
இதோ -
அவருடைய திரைப்படங்களை
வைத்து
அவருடைய வரைபடத்தை
வரைகிறேன்!

கலைஞர் ஓர் அணையா விளக்கு!
திறமைகளின் புதையல்!
காஞ்சித் தலைவனின் தங்கத் தம்பி!
பெரியார் - அண்ணா
இருவர் உள்ளத்தையும் கொண்ட
புதுமைப்பித்தன்!

தமிழனின் பெருமையைத்
திரும்பிப் பார் எனச்சொன்ன
குலக்கொழுந்து!
"ராஜாராணியாய் வாழ்ந்த இனம்
வீதியில் பூமாலையாய் கிடப்பதோ?
மண்ணின் மைந்தன்
மாடிவீட்டு ஏழையாய் வாழ்வதோ?"
என்று கேட்டவர்!

பராசக்தியின் பெயரால்
நீதிக்குத் தண்டனை தரப்பட்டபோது
பொறுத்தது போதும் என்று
பொங்கி எழுந்து
நியாயத் தராசில்
நெஞ்சுக்கு நீதி பெற்றவர்!

மலைக்கள்ளனையும் பார்த்தவர்!
மருதநாட்டுஇளவரசியையும்பார்த்தவர்!

ராஜகுமாரியானாலும்
மந்திரிகுமாரியானாலும்
குறவஞ்சியானாலும்
"நாம் ஒரே ரத்தம்" என்று
உரக்கச் சொன்னவர்!
வண்டிக்காரன் மகன்களுக்கும்
மணிமகுடம் கிடைக்கச் செய்தவர்!

அவர் எழுதுகோல் என்னும்
உளியின் ஓசை
தமிழகத்தை வடித்தது!
அவர் அனுப்பிய காகித ஓடம்
தமிழனைக் கரைசேர்த்தது!

தூக்குமேடைக்கும் அஞ்சாத
அபிமன்யு அவர்!
தன் மகுடிக் குரலால்
எதிரிகளை
"ஆடு பாம்பே" என ஆடவைத்தவர்!

பாடாத தேனீக்களாய்
பாலைவன ரோஜாக்களாய்-
இருந்தனர் பெண்கள்!
அவர்களை-
பெண்சிங்கங்களாய்
புதிய பராசக்திகளாய்ப்
புறப்பட வைத்தவர்!

"இது எங்கள் நீதி" என்று
பூமபுகார் கண்ணகியாய்-
மனோகரா கண்ணாம்பாவாய்-
கேட்டுப் பெறவைத்தவர்!
தென்றலும் சுடும் என்பதை
தெரியப்படுத்தியவர்!

பொன்னர் சங்கர் போல
பாசப்பறவைகளாய் - நம்மை
வாழவைக்கும் தாய் அவர்!

அவர் பெயரை மறக்க முடியுமா?
அவர் புகழை மறைக்க முடியுமா?
இன்று
தந்தையின் புகழ்காக்க வருகிறது
பிள்ளையோ பிள்ளை!
இலட்சியத்தில் என்றென்றும்
இளைஞர் அவர்!
நம் இனத்தின்
காவலுக்குக் கெட்டிக்காரன்!

வெல்லட்டும்
கலைஞரின் நூற்றாண்டு!
நம் தன்மான ஆடைக்கான
நூலை நூற்ற ஆண்டு! ●



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் மண்டலம் 21வது வார்டில் திருவள்ளுவர் நகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரசு மருத்துவ காப்பீட்டு அட்டை பதிவு செய்தல் சிறப்பு முகாம் மற்றும் சிறப்பு உணவு வழங்கும் நிகழ்ச்சி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன் தலைமையில் பல்லாவரம் சட்ட மன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தெற்கு பகுதி செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அடையாறு மண்டலத்திற்குட்பட்ட

## ஏ.ஜி.எஸ். காலனியில் நீரேற்று நிலையம் ஆய்வு!

### தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு மேற்கொண்டார்!

சென்னை,ஜூன்.26-

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட ஏ.ஜி.எஸ். காலனியில் உள்ள நீரேற்று நிலையத்தினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நேற்று (25.06.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள அலுவலர்களை விழிப்புணர்வோடு பணியாற்றுமாறும், பாதுகாப்பான முறையில் நீரேற்று நிலையத்தை பராமரிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் சிம்ரன்ஜீத் சிங் காஹ்லோன், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். இராஜேந்திரன் உட்பட பலர் உடன் இருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் பிறந்தநாள் விழாவை ஒட்டி. அரும்பாக்கம் குளக்கரை தெருவில் நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவை தயாநிதி மாறன் எம்.பி. வழங்கினார். உடன் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., ராமலிங்கம், 105 ஆவது வட்ட செயலாளர் அதியமான், 105 வட்ட பகுதி பிரதிநிதி சங்கர், மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.